பொது சன நூலகம்
29 JUN 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5-00

சங்கு வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 15 வியாழக்கிழமை (29 - 06 - 2000) VALAMPURI ஒலி: 192

## ★ இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர

# அரசையும், புலிகளையும் பேச்சுக்கு கொண்டுவருவது சுலபமானதல்ல!

### நோர்வே தூதுவர் எரிக்சோல்ஹைம்

[கொழும்பு அலுவலக நிருபர்]

**இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இனயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சிறிலங்கா அரசையும், விடுதலைப்புலிகளையும் பேச்சு வார்த்தை மேசைக்கு அழைப்பதென்பது அவ்வளவு சுலபமான விடயமல்ல.**

இவ்வாறு கொழும்பு வந்துள்ள இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு நோர்வே அரசினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட தூதுவர் எரிக்சோல்ஹைம் எமது கொழும்பு விசேட செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

தூதுவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சிறிலங்கா அரசையும் விடுதலைப்புலிகளையும் பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வருவது கடினமாக இருந்தபோதும் அந்த முயற்சியில் நோர்வே தொடர்ந்து பாடுபடுவதுடன் பேச்சுக்கள் தொடர்ந்தும் நடைபெறும்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் நோர்வே அரசு ஈடுபட்டுவருவதை அமெரிக்கா இந்தியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினை மத்தியஸ்தத்திற்கும் எமக்கும் எந்தவித தொடர்புமில்லை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மத்தியஸ்தம் வகிக்க முன் வந்திருக்கும் நோர்வே அரசுக்கும் எமக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்று சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

அந்த ஸ்தாபனம் மேலும் தெரிவிக்கையில்;

சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஐக்கிய இராச்சியம், நோர்வே ஆகியவற்றின் மனிதாபிமான அடிப்படையில் அமைந்த பக்கச் சார்பற்ற ஸ்தாபனமாகும் என்று தெரி

(4ம் பக்கம் பார்க்க)

### யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும்

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் யுத்த அழிவுகளினால் மக்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்களுக்கு முடிவு காணும் வகையில் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்று அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் உடனடியாக கொண்டுவரப் படவேண்டும் அதற்கு எமது ஆதரவு உண்டு.

இவ்வாறு ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக சோல்ஹைமை நேற்று சந்தித்த போது கேட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### 850 பேர் அடங்கிய விமானப்படை அணி பயிற்சி முடித்து வெளியேற்றம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் 850 பேர் கொண்ட புதிய அணி பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ளது.

இவர்களின் அணிவகுப்பு கடந்த வெள்ளிக்கிழமை தியத்தலாவ விமானப்படைத் தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.

இவர்களில் தொண்ணூறு பேர் விமானிகள் என்றும் பயிற்சியை முடித்துக் கொண்ட அனைத்துப்படையினரும் யுத்த முனைகளுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-வ)

### விமான நிலையத்தில் கைதான 67 பேரை விடுவிக்க தொ. தவிர்ப்புக் குழு உத்தரவு

(கொழும்பு)

சட்ட பூர்வமாக விசா, கடவுச் சீட்டு, ரிக்கற் பெற்று டுபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருந்த சமயம் கடந்த மே, யூன் மாதங்களில் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட 67 பேரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று சட்ட விரோதக் கைது மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவிட்டுள்ளது.

இந்த 67 பேரும் நிரபராதிகள் என்று சட்டமா அதிபர் திணைக்கள சிரேஷ்ட சட்டத்தரணி மலங்கொட கடந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விலையுயர்வை ஆராய குழு

தற்போதைய சூழ்நிலையை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள விலையுயர்வுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஆராய அமைச்சர் உட்பட நால்வர் அடங்கிய குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது. (ச)

### தபால் பொதிகள் வந்தன

பருத்தித்துறையை நேற்று வந்தடைந்த செஞ்சிலுவைக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 120 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை இன்று தரம்பிரித்து

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு அறிவித்தல்

யாழ். பிரதேச செயலர் பிரிவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும். (ச)

### ★ செம்மணி புதைகுழி விவகாரம் சந்தேக நபர்கள் பிணையில் விடக்கோரி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

செம்மணி புதைகுழிவழக்கு தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்களும் தம்மைப் பிணையில் விடுமாறு கோரி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் தமது பிணை மனுவில் செம்மணி புதைகுழி தொடர்பான கொலைகளில் தமக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்றும், தாம் அக்கொலைகளைச் செய்யவில்லையெனவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இப் பிணை மனு மீதான விசாரணை யூலை மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (வ)

### குடாநாட்டுக்கான சுழற்சிமுறை மின் விநியோகம் விரைவில் சீரடையும்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கான சுழற்சி முறையிலான மின்விநியோகம் விரைவில் சீரடையும் எனத் தான் எதிர்பார்ப்பதாக இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பதில் முகாமையாளர் முத்திரெட்ணானந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: தொழில் நிறுவனங்களின் வசதிகருதி யாழ் நகரப் பகுதிக்கான மின் விநியோகம் காலை எட்டு மணிமுதல் மாலை நான்கு மணிவரை வழங்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் ஏற்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கரு ஜெயசூரியா தலைமையில் உபகுழு

(கொழும்பு)

சுயாதீன சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகிய இரு குழுக்கள் அமைப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் இடையே நேற்று முன்தினம் நிகழ்ந்த சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ்விரு ஆணைக் குழுக்களை நியமிப்பது தொடர்பான அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரிய தலைமையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போதும் வேறுபல சம்பவங்களின் போதும் உயிரிழந்த உறுப்பினர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு:

★ கோருஜன் (செங்காதரன் யோகேஸ்வரன்) அம்பாறை

★ நேசமதன் (தம்பிமுத்து மனோரஞ்சன்)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோடு தமிழீழ ஆதரவு மாநாட்டில் எல்.கே.அத்வானி கலந்துகொள்வார்

### பி. ஜே. பி. செயலர் வெங்கையா நாயுடு

(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தினர் ஈரோட்டில் நடத்தவிருக்கும் மாநாட்டில் இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி கலந்து கொள்ள விருப்பதாக பி. ஜே. பி. பொதுச்செயலாளர் வெங்கையாநாயுடு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யூலை மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் ஈரோட்டில் நடைபெறவிருக்கும் மாநாடு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் கூட்டும் அரசியல் மாநாடு என்றும் தமிழீழ ஆதரவு மாநாடு என்று வர்ணிப்பது தவறானது என்றும் அவர் தெரிவித்தார்.

செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த வெங்கையாநாயுடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விண்ணப்பப்படிவம்

மொறட்டுவ பல்கலைக் கழகக் கற்கைநெறிக்கான படிவம் பாலர் ஆசிரியர்பதவிக்கான படிவமும் விற்பனையாகின்றது. நாயக பாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய். (1321)

### விற்பனைக்கு

ஐஸ் கோண் விற்பனைக்கு உண்டு, சேகர் போட் டோர்ஸ் 118, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (1343)

புதிதாக செய்விக்கப்பட்ட நாய்க்கூடு விற்பனைக்கு உண்டு. ஒரேவிலைரூபா 5.500 கு. சோமசுந்தரம், சந்தை ஒழுங்கை, புதுமதவடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (1336)

வயலின், தம்புரா, கார்மோனியம் நிப்பொண் "12 கறுப்பு வெள்ளை T.V. அன்ரனா பூஸ்ரருடன் M.T. 50 HONDA மோட்டார் சயிக்கிள். தி. திருக்குமரன் வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு சுழிபுரம். (1167)

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு சுரேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் சங்கரத்தைக்கும் சித்தன் கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கீழ்காணும் முகவரிக்கு வழங்கவும், கண்ணன் களஞ்சியம், தபாற் கந்தோரடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (1344)

கைதடி கிழக்கை சேர்ந்த ஆறுமுகம் வனிதறஞ்சினியின் வி. அ. அ. இல. 69102 0200 திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் வரும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைதடி கிழக்கு, கைதடி என்னும் விலாசத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். (1348)

சேனாதிராசா இலட்சுமி காந்தன் பெரியபளை, பளை. என்னும் முகவரியை உடைய தேசிய அடையாள அட்டை இல. 682533102 V விசேட அடையாள அட்டை இரண்டும் வல்லைக்கும் துன்னாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். கமநல சேவை நிலையம், புலோலி பருத்தித்துறை. என்னும் முகவரியில் தந்துதவுமாறு தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம். (கி-590)

### அபூர்வ ஜோதிடநிலையம்

சலதோசம உருவாக்கும் இடி புண்ணை மாற்றிவிடல், தொல்லைதரும் குஷ்டரோகம் அறவே நீக்கம், கல்வி, தொழில், திருமணம், அதிஷ்டமாக அமைதல் சனிஞாயிறு A-M8.30-1.00No30Aபலாலி வீதி, ஆலடிச்சந்திகந்தர்மடம். (1324)

### வைத்தியர் தேவை

எமது வைத்தியசாலையில் காலை நேர வைத்திய சேவைக்குMBBS அல்லதுRMB (A M B)க்கான வெற்றிடம் காலியாகவுள்ளது. ஆகவே உடன்தொடர்பு கொள்ளவும். யாழ். வைத்திய சாலை 284, பலாலிவீதி, கந்தர்மடம், [1353]

### இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள்தேவை. தொடர்பு தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைசந்தையடி நல்லூர். (1320)

---


## அஜந்தாஸ் ஸ்ருடியோ

வதிரி நெல்லியடி

★ பாடசாலைப் பிள்ளைகளின் அஞ்சல் அறிமுக அட்டை

★ தேசிய அடையாள அட்டை

★ விஷேட அடையாள அட்டை என்பவற்றிக்கான படங்கள் நல்ல தரம் வாய்ந்ததாக உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படுகின்றன.
மு.கு:- தொகுத்து எடுக்கும் பாடசாலைகளுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

★ உங்கள் தேவைகளுக்கு ஏற்ப படம் பெரிதாக்கியும் B/W கொடுக்கப்படுகின்றன: (அந்தியேட்டி)

★ சிறந்த உட்புற, வெளிப்புற கலர்ப் படங்களும் எடுத்துக் கொடுக்கப்படுகின்றன. (கி/589)


---

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை ஆறுமுகம்

எமது பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளர்

**அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்கள் அகாலமரணம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சபையினர்

யா / கரம்பொன் சண்முகநாத ம. வி.
ஊர்காவற்றுறை. (1352)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியரும்
பா. அ. சங்க செயலருமான
**சோழியூரான் - பிறைசூடிக் குரு**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**அன்னம்மா சின்னத்துரைக் குருக்கள்**
அவர்கட்கு

இக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பறாளாய் ஈசுர விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
(பா. அ. சங்கம்)
யா/ சுழிபுரம் வடக்கு, ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்.

(1350)

---

## 1- ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் | 14 | 80 | 1961



மறைவு | 10 | 07 | 1999

### செல்லமுத்து ரட்ணராஜா

திதி - திரியோதசி 29-06 2000

உள்ளத்தில் குழந்தையாய் ஊர் போற்றும் உத்தமனாய்
இல்லத்தின் ஒளிச்சுடராய் பிரகாசித்த அன்புச் செல்வமே
பொறுப்புடன் இருந்து எம்மை விருப்புடன் வாழவைத்தீர்
நீர் நிழலாக இருக்கையிலே நிம்மதியாய் நாம் இருந்தோம்
நிழலும் மறைந்திடவே நிம்மதியும் குலைந்ததுவே. நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சோகமுடன் மறைந்தாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அணையாத தீபமாய் இருந்து
எங்களை வழி நடத்தும் வண்ணம் பிரார்த்திக்கிறோம்.

இராஜ வீதி, தோப்பு,
அச்சுவேலி.
(1337)

தாய், சகோதரன்,
சகோதரிகள.

---

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 22 ஆம், 23 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்களின் நேற்றைய தொடர்ச்சி இங்கே பிரசுரமாகின்றது.

| | | | |
|---|---|---|---|
| | | 148019 ஏ | 148028 ஏ |
| | | 148028 பி | 148028 சி |
| | | 148033 ஏ | 148041 ஏ |
| | | 148041 பி | 148050 ஏ |
| | | 148050 பி | 148050 சி |
| | | 148055 ஏ | 148087 ஏ |
| | | 148087 பி | 148178 ஏ |
| | | 148179 ஏ | 148715 ஏ |
| 147856 ஏ | 147856 பி | 133066 ஏ | 141120 ஏ |
| 147856 சி | 147856 டி | 130375 ஏ | 130375 பி |
| 147871 ஏ | 147876 ஏ | 130375 சி | 137234 ஏ |
| 147885 ஏ | 147896 ஏ | 137234 பி | 137234 சி |
| 147900 ஏ | 147913 ஏ | 137234 டி | 137234 ஈ |
| 147913 பி | 147920 ஏ | 142698 ஏ | 143051 ஏ |
| 147920 பி | 147920 சி | 143051 பி | 143051 சி |
| 147922 ஏ | 247922 பி | 143054 ஏ | 143149 ஏ |
| 147925 ஏ | 147926 ஏ | 143149 பி | 143149 சி |
| 147926 பி | 147936 ஏ | 144035 ஏ | 144035 பி |
| 147939 ஏ | 147939 பி | 144249 ஏ | 144263 ஏ |
| 147945 ஏ | 147947 ஏ | 142463 பி | 144263 சி |
| 147948 ஏ | 147948 பி | 144263 டி | 144303 ஏ |
| 147948 சி | 147983 ஏ | 144322 ஏ | 144322 பி |
| 147983 பி | 147984 ஏ | 144337 ஏ | 144399 ஏ |
| 147984 பி | 147986 ஏ | 147764 ஏ | 147764 பி |
| 147986 பி | 147986 சி | 147764 சி | 147771 ஏ |
| 147987 ஏ | 147987 பி | 147771 பி | 147809 ஏ |
| 147987 சி | 147989 ஏ | 147809 பி | 147862 ஏ |
| 147989 பி | 147989 சி | 147862 பி | 147877 ஏ |
| 147989 டி | 147989 ஈ | 147878 ஏ | 147889 ஏ |
| 148009 ஏ | 148011 ஏ | 147889 பி | 147889 சி |
| 148011 பி | 148014 ஏ | 147889 டி | 147897 ஏ |
| 148014 பி | 148014 சி | | |

(தொடரும்)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**இராசதுரை கமலநாதன் (இராசா)**
(சாவகச்சேரி சகானா புத்தகநிலைய / மருந்தக உரிமையாளர்)

மண்மகிழ 20.04.1954 | மனம்நெகிழ 30 05.2000

அன்பு பொங்கும் அமுத மொழிகளும்;
ஆர்வம் மிக்க செயல்களும்; எங்களைத்
துன்பம் என்ற நிழல்படியா வண்ணம்
சுமந்ததும் கனவாய்க் கதையானதே!

அன்புருவே! தங்கள் ஆத்மா ஆண்டவன்
அடிநிழலில் ஆறுதல் அடைக!
ஓம், சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தற்போதைய முகவரி
ப.நோ.கூ. சங்கம்,
அருகாமை
சுன்னாகம்.


மனைவி, மக்கள்.

(1290)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் | 20 | 08 | 1935



விண்ணில் | 29 | 06 | 1999

### அமரர் அருளப்பு பிலிப்பையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஓ! நேசத்திற்குரியவரே
நேசத்தமிழை
உன் உதடுகள் மறந்து
ஆண்டும் ஒன்று ஆயினதோ?
நீ சிருஷ்டித்து விட்ட
இயல், இசை, நாடகங்கள்
தேசத்திலிருந்து
இன்றும் எதிரொலிக்கின்றனவே!
நல்லாசானாய் கவிஞனாய்
பேச்சாளனாய் கலைஞனாய் முற்றிலும்
தமிழனின் உருவமாய்
நீ வாழ்ந்து காட்டியவை
கண்களில் ஒற்றிக்கொள்ள வேண்டியவை
குரூர அமைதிக்குள்
உன்னை முடித்துக்கொண்ட போது
சொந்தமண் ஏந்தும்
பேறு பெற்றனையே
தேசமும் தமிழும்
நேர்ந்து பெறும் வேளை
மீண்டும் ஒருமுறை
நீ வேண்டும் இம்மண்ணில்
வருவாயோ நேசத்திற்குரியவரே:

என்றும் உம் நினைவில் வாழும்
மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

[1300]

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருதுபவர்

- குறள்

# வலம்புரி

## மௌனித்த தொலைபேசிகள்

உலகம் சுருங்கி விட்டது. விஞ்ஞானத்தின் விந்தை விந்தியம் போல் உயர்ந்து நிற்கிறது. மேற்குலகுகளுக்கு இக் கூற்றுக்கள் பொருந்தும். ஏதிலித் தமிழன் வாழும் மண்ணுக்குப் பொருந்தாது.

ஆயிரம் மைல்களையும் அண்மைக்குக் கொண்டு வந்த தொலைபேசிகள் மௌனித்துவிட்டன. சவவாதம் சுவைப்பித்தம் போல் தொலைபேசி அழைப்புகள் கொடுப்பதில் சட்ட விதிகள் திடுதிப்பென்று யாருமே எதுவித அறிவிப்புமின்றி. அழைப்புகளுக்கு கிரய நிலையிலுள்ளவைகளை கொடுப்பார்கள். அது பறந்துகெட்டால் அவை எல்லாம் நிராகரிக்கப்பட்டுவிட்டன புதிய பதிவுகள் செய்யுங்கள் என்பர்.

சக்கரைப்பந்தலில் நீர் வார்ப்பது போல புண்ணிய சேவை இடம்பெறும் தொலைத்தொடர்பகம். அங்கு பணிபுரிபவர் தொண்டூழியப் படையில் தியாக சேவைபுரிய வருமல்லர். சம்பளம் கொடுத்துப் பணியில் அமர்த்தப்பட்டவர். பணியில் பணிவு கைவர வேண்டும். எதேச்சாதிகாரப் போக்கு இருக்கக் கூடாது. ஆயிரமாயிரம் அள்ளி இறைத்துப் பெற்ற தொலைபேசிகள் பல நோக்கங்களைக் கொண்டவை.

பாச உறவுகளுடன் பேசிக்களிக்கவும் பல்வேறு காரியங்களை செய்து முடிக்கவும், போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத நிலையில் அவசர போக்குவரத்துச் சாதனம். பல்துறை பிற நாடுகளிலிருந்து உறவுகளிடம் பெறும் துணை நிற்பது. இடமாற்றத் தகவல்களையும் பெற உதவுவதும் இச் சாதனமே.

இல்லங்களைக் கைத்தடியாய் இன்னலுறு கிழவர்களுக்கு ஆறுதல் வார்த்தை தருவதும் தொலைத் தொடர்பே. மணியோடர் பொருளாதாரம் பெற்ற தமிழன் இன்று தொலைபேசிப் பொருளாதாரத்தில் தவிக்க உள்ளான்.

இவற்றைக் கருத்தில் கொண்டு புண்ணியத்தில் உழுகின்றோம் என்ற கருத்தை விட்டுவிட்டு முதலுக்கு மக்கள் பயன்பெறுவன செய்யப்படும். அதுவும் இழுத்தடிப்பின்றி சங்கக்கடை மண்ணெண்ணெய் விநியோகம் போல் அல்லாமல் நேர்த்தியான முறையில் சேவை புரியட்டும்.

பிரதான அலுவலக செய்திகள், கல்வி, பரீட்சை வேறு உடனுக்குடன் அறிய வேண்டிய செய்திகளை அறிய துணை [illegible].

---


### தகுதிகாண் ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

26.01.98 இல் தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்று 2000 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்கான பெயர்ப் பட்டியலில் பெயர் இடம் பெறாத அனைத்து ஆசிரியர்களும் 01.07.2000 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆனைக்கோட்டையில் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும், உயர் கல்லூரி நிறுவனத்திற்கு உங்கள் ஆவணங்களுடன் தவறாது சமுகம் தரவும்.

தகுதிகாண் ஆசிரியர்கள்.

(1368)

### விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் யாழ்.

O/L பிரிவு 5 DAY CLASS சகல பிரிவுகளும்
O/L EVENING CLASS
ஆண்டு 10, 9, 8, 7, 6 சகல வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டன.
சமுகம் தராத மாணவர்கள் உடன் சமுகம் தரவும்.
கணித பிரத்தியேக வகுப்புகள்
ஆசிரியர் திரு. C.K.B தயாளன்
ஆரம்பம் 01.07.2000 (1. மணி)

(1367)

### வரைவுள்ள நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுந்தீவு
(யா-1662-1979.12.05)

### பொதி ஊர்தி ஓட்டுநர் பதவிக்கான பதவி வெற்றிடம்

எமது சங்கத்தின் பொதி ஊர்தி ஓட்டுநருக்கான பதவி விண்ணப்பம், தகுதியானவர்களிடம் இருந்து வரவேற்கப்படுகிறது.

தகைமைகள்:-

1) ஆகக் குறைந்த கல்வித் தகைமை—8ம் தரம் சித்தி
2) ஐந்து வருடத்திற்குக் குறைபடாத ஓட்டுநர் அனுபவச் சான்று
3) வயது 25—45 வரையில
4) வேதனம்:- கூட்டுறவு ஆணையாளர் ஆணைக்குழு 31/97 சுற்று நிருபத்திற்கு அமைவாக
2800-4250
65 x 10-80 x 10

பொதி ஊர்தி தீவு [illegible] ரப் பகுதியில் [illegible] பகுதியில் [illegible] முன்னுரிமை அளிக்கப்படும்.

தகைமைச் சான்றிதழ்களின் [illegible] "தலைவர், நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நெடுந்தீவு" என்ற முகவரிக்கு ஜூலை மாதம் 15 ஆம் நாளுக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்.
நெடுந்தீவு பல நோக்கு
கூட்டுறவுச் சங்கம்
நெடுந்தீவு.
2000-06-24

(வி/588)

### கொழும்புத்துறை இ. மகா வித்தியாலயம்

[யாழ்ப்பாணம்]
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் தற்போது வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் இயங்கி வருகிறது என்று மேற்படி வித்தியாலய அதிபர் திருமதி ஜெயந்திமாலா சிவபாலன் தெரிவித்துள்ளார்.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை இவ் வித்தியாலயம் இயங்குகிறது. [சி]

### கண்டெடுக்கப் பட்டது

(மந்திகை)
கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவி விநாயகமூர்த்தி கனுரேகா இல: (91016524) என்பவருடைய விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு தென்மராட்சி வலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் நெல்லியடி ம.ம. வித்தியாலயத்தில் இயங்கும் வலயப்பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளனர். (23-சி)

### PATRICIAN INSTITUTES
### பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

மேற்படி நிறுவனத்தில் கல்வி பயின்ற மாணவர்களின் நன்மை கருதி எமது பயிற்சி நெறிகளின் மூன்று பிரிவுகள் தற்காலிகமாக மானிப்பாயில் உள்ள ST. ANNE'S CHURCH இல் இயங்கும் HUDEC நிறுவனத்தில் ஆரம்பமாகின்றன.

ஆரம்பமாகும் பயிற்சி நெறிகள் பின்வருமாறு:

1. COMPUTER COURSES
   A. DIPLOMA IN MS-OFFICE
   B. CERTIFICATE COURSES

இத்துடன் N.C.C.A. இற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.

2. SHORT-HAND TYPING (ENGLISH)
3. SHORT-HAND TYPING (TAMIL)

ஆரம்பம்: 3-7-2000 (திங்கட்கிழமை)
இடம்: மானிப்பாய் ST. ANNE'S CHURCH இல் உள்ள HUDEC நிறுவனத்தில்
நேரம்: காலை 9-00 மணி

சகல மாணவர்களையும் உடன் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவற்றுடன் புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முக்கிய குறிப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்திலும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக இருப்பதால், மானிப்பாய்க்கு சமுகம் தர வசதி இல்லாதவர்கள் 4-7-2000 (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாண அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களுக்கோர் அறிவித்தல்

மேற்படி பயிற்சிகளை கற்பிக்கும் ஆசிரியர்கள் 30-6-2000 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர்
Patrician Institutes
59, St Patrick's Road,
Jaffna

[1360]

### திருமண அழைப்பிதழ்

திருநிறைச் செல்வன்
V.P. சண்முகநாதன்
(பிரதம லிகிதர் கமநலசேவை வேலணை)

திருநிறைச் செல்வி
மாக்கி (சசி)
(யேசி மாகிறெட்)
(ஆசிரியை)

இடம்: நல்லூர் திவ்யஜீவனசங்க மண்டபம் (சட்டநாதர் கோவிலடி)
திகதி: 02-07-2000 நாளை 12-00 - 12-45 வரையுள்ள சுபவேளை

நண்பர்கள், உறவினர்கள் தொடர்ந்து நடைபெறும் மதிய போஷன விருந்திலும் கலந்து கொள்ளவும்.

திரு. திருமதி பிள்ளையார் குடும்பம்
68, குறோசெந் லேன்,
கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
வேலணை - 3.

திரு. திருமதி ஜெயரத்தினம் குடும்பத்தினரும், சகோதரர்களும்.
இணுவில் மேற்கு.

தேநீர் விருந்துபசாரம் இணுவில் மஸ்ரி ஓயில் லேனில் மணமகள் இல்லத்தில் 05-07-2000 புதன் மாலை 3.00 P.m. நடைபெறும். (1340)

### கணக்கீடு

திரு. பாலவாசன்
B.B.A (F.M. Spl)

A/L 2001
வருமானச் செலவுக் கணக்கு
Sat, Sun 9 — 10 a.m.

A/L 2002
தனிவியாபார முடிவுக் கணக்கு
Sat, Sun 7 — 8 a.m.

ஆரம்: 1-7-2k Sat.

VICKNA
கல்வி நிறுவனம்
(1364)

## ★ தமிழீழ ஆதரவு மாநாட்டில் அரசியல் அமைப்பிற்குட்பட்ட தீர்வை அமைச்சர் அத்வானி வலியுறுத்துவாரா?

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதாக இருந்தால் இலங்கையின் அரசியல் திட்ட வரம்புக்குள்ளேயே தீர்வு காணப்பட வேண்டுமென்ற கருத்தை ஈரோட்டில் நடைபெறவுள்ள தமிழீழ ஆதரவு மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி வலியுறுத்திக் கூறுவார் என்று தமிழக ராஜீவ் காந்தி காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாழப்பாடி இராமமூர்த்தி மேலும் தெரிவிக்கையில்; ஈரோட்டில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கு "தமிழ் விழிப்புணர்ச்சி" மாநாடு என்று ம.தி.மு.க பெயர் இட்டிருந்தாலும் அது தமிழீழ ஆதரவு மாநாடாகவே இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அத்வானியின் தமிழக விஜயத்தை ஒட்டி அவருக்கு கறுப்புக் கொடி காட்டுவதென காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## பதிவு செய்யவும்

யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று, தற்போது இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் அனைவரும் (க.பொ.த.சா.தரம் உட்பட) தமது விபரங்களை யா/ஞானவில் மத்திய கல்லூரியில் ஜூலை 05-ந் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் 12 மணிக்கிடையில் பதிவு செய்யுமாறு அதிபரால் கோரப்பட்டுள்ளது. (வ)

## யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்ப்பாண பொருட்களைக் கொழும்பிற்கு "லங்கா முடித" கப்பலில் அனுப்புவோரது கவனத்திற்கு

இன்னும் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் லங்கா முடித பிரயாண இல.44 கப்பலில் யாழ்ப்பாண பொருட்களை ஏற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே "லங்கா முடித" கப்பலில் பொருட்களை அனுப்ப விரும்புபவர்கள் உடனடியாக யாழ்.செயலக புனர் வாழ்வுப்பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்

(இ.594)

## விவசாயிகளுக்கு தெரியாது

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'பொலகொட' கப்பலில் வெங்காயம் புகையிலை, ஆகியவற்றை ஏற்றுவதற்கு தனியார் ஒழுங்கு செய்துள்ள போதிலும் இவற்றுக்குப் பணம் வசூலிக்கப்படுமா என்பது பற்றி குறித்த விவசாயிகள் அறிய முடியாதிருப்பதாகத் தெரியவருகிறது.

### யுத்தத்திற்கு...

இச்சந்திப்பு நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம்பெற்றது. ஈ.பி.டி.பி தூதுக்குழுவில் யாழ். மாவட்ட எம்.பிக்களான டக்ளஸ் தேவானந்தா, ஜெகன், எஸ். தவராஜா, எஸ். சிவதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை நோர்வேயின் விசேட தூதுவர் தமிழர்விடுதலைக் கூட்டணியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது. (வ)

### அரசையும்...

வித்து வருவதைநாம்வரவேற்கிறோம் என்றார்.

நோர்வே தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பல தடவைகள் கொழும்பு வந்திருந்த போதும் தமிழ்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்திருப்பது இதுவே முதல்தடவையாகும்.

### இனப்...

விக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் விசேட தூதுவர் நேற்று கொழும்பு வந்திருந்த சமயம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே. (வ)

### ஈரோடு...

தமிழீழத்திற்கு ஆதரவானது அல்ல என்றும் தெரிவித்த அவர் ம.தி.மு.கவினாலோ, பாட்டாளி மக்கள் கட்சியாலோ மத்திய அரசுக்குப் பாதிப்பு இல்லை என்றும் அவர் கூறினார். (வ)

### குடாநாட்டுக்கான...

படும் மின்தடங்கல்கள் பெருமளவில் குறைவடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதே வேளை பழுதடைந்த மின் பிறப்பாக்கிகளை திருத்தம் செய்வதற்கான உதிரிப் பாகங்கள் அடுத்து வரும் கப்பல்களில் எடுத்துவரப்படவுள்ளதாகவும் அவை வந்தடைந்ததும் தொடர்ந்தும் வேலைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (க-03)

### கரு...

உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த உப குழுவில் அமைச்சர்கள் ஜி. எல். பீரிஸ், பட்டி வீரக்கோன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (வ)

### விமான...

திங்கட்கிழமை அறிவித்தார். இதனை அடுத்தே இவர்களை விடுதலை செய்யநடவடிக்கை எடுக்குமாறு சட்டவிரோதக் கைது மற்றும் தொல்லை தவிர்ப்புக்குழு பொலிசாருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. (ச-வ)


'ராஜா'
யாழ்ப்பாணம்

விஜய். மந்த்ரா
ரகுவரன் சுபலக்ஷமி
நடித்த

லவ் டுடே

புதியநேரம்10-30 – 2-00
[இ/555]


## எலும்புக் கூடு இனங்காணப்பட்டது

கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் பகுதியில் மலசல குழியில் இருந்து மீட்கப்பட்ட நான்கு மனித எலும்புக் கூடுகளில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் பன்னங்கண்டியைச் சேர்ந்த கந்தசாமி முத்துலிங்கம் (வயது 38) என்பவருடைய எலும்புக் கூடென அவரது மனைவி வசந்தாதேவி முத்துலிங்கம் அடையாளம் காட்டியுள்ளார். (ச-7)

### புலிகள்...

மட்டக்களப்பு
★ இசைநாதன் (வடிவேல் சிவகுமார்) அம்பாறை
★ மகேந்திரலிங்கம் வெள்ளைக்குட்டி ஜெயகரன் அம்பாறை
★ சேரமதி (மெய்யப்பன் ஜெயலட்சுமி) உடையார்கட்டு
★ ராஜசிங்கம்/ராஜன் (பலோசியான் கானிகநேசன்) மன்னார்
★ வெற்றிச்செல்வன் (ராமு ஸ்ரீமுருகானந்தன்) வவுனியா
★ இளம்பரிதி/ஜோன்சன் (தவசி இந்திரதேவன்) திருமலை (வ-7)

### தபால் பொதி...

விநியோகிக்கப்படவுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வெளியூர்களுக்கான 42 தபால்பொதிகள் மேற்படி கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (3-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் (பெரியபாலு) நாகராஜேஸ்வரி

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகராஜேஸ்வரி (28-06-2000) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-06-2000) வியாழக்கிழமை 10-30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1032 கே. கே. எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
சு. தர்மேந்திரா.
(மகன்)

[1375]

### திருமதி நாகம்மா சுப்பிரமணியம்

திருநெல்வேலி, வளாகவீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சுப்பிரமணியம் நேற்று புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம், அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொற்கொடி, பவளக்கொடி (பிரான்ஸ்,) இராஜகோபால(புகையிரத சாரதி, கொழும்பு), சந்திரகோபால் [லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நடராஜா, தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற தவமணிதேவி, பரமேஸ்வரி (லண்டன்), பால சுப்பிரமணியம (லண்டன்), சிறிதரன் (ஆசிரியர் யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-6-2000) வியாழக்கிழமை மதியம் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/6, வளாகவீதி,
திருநெல்வேலி
(இ/595)

தகவல்
ம. சிறிதரன்
(மருமகன்)

### கிருஷ்ணர் துரைசுவாமி

கல்விச் சேவையில் முன்னாள் அதிபரும் சமூக சேவையாளரும் முத்தமிழ்ஆசானும் சிவஞான சாகரமுமாகிய கிருஷ்ணர் துரைசுவாமி அவர்கள் செவ்வாய் இரவு (2000-06-27இல்) தமது 92 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் சிவஞானவதியாரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சின்னத்தங்கம், தருமலிங்கம், முத்துத்தம்பி, நமசிவாயம், சிவலிங்கம், தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராசவைத்தியர் அ.க.குமாரசாமி, வைத்தியகலாநிதி அ.க.காசிப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி வீரபத்திரர் மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொறியியலாளர் சிவகுமாரின் (லண்டன்) அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 28-06-2000 பி.ப 2.00 மணியளவில் வழுக்கையாற்று மயானத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், மாணவர், தமிழன்பர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிவஞானவதியார் (மனைவி)
பொன்.காங்கேயநாதன் (தம்பி)

வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.

[1365]

## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் மனோன்மணி

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட தர்மலிங்கம் மனோன்மணி நேற்று [28 6 2000] காலமாகி விட்டார், இவர் U M பேரின்பநாயகம் [கனடா] U M தியாகராஜா [கனடா] ப. சாரதாதேவி ஆகியோரின் அருமைத்தாயாரும் அரவிந்தநாதன் [கனடா] ஆகியோரின் பேத்தியும் க. பரந்தாமன் [யாழ். மாநகரசபை ஊழியர்] மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [29.6.2000] 12.00 மணியளவில் குடும்பமயானத்தில் நடைபெறும்.

தகவல்
க.பரந்தாமன் (மருமகன்)

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

(1373)

### சூசை மாணிக்கம் பெர்னாண்டோ

(வேம்பார்)

57, தேவாலய வீதியைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் S.M. Fernando நிறுவனத்தின் உரிமையாளருமாகிய சூசை மாணிக்கம் பெர்னாண்டோ 27-6-2000 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் ஸ்ரெல்லாபெர்னாண்டோவின் அன்புக் கணவரும், ஸ்ரீமதி, காலஞ்சென்ற அமலம், யோகம், சகாயறாஜ், கெமிலா, கில்டா, ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயறாஜ், குணசீலன், செபஸ்ரியன், கொன்சி, ராஜாஜி, ஸ்ரான்லி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜனின் பெரியப்பாவும்.

லேணன், சுபாஷினி, ரிச்சேட், சுதர்ஷினி, சுரேஸ், லெலாணி, புளோறா, ஷர்மன் தர்சன், ராஜீவ், சஞ்ஜீவ், இந்திரா, சிந்தியா, சிறில், கிசோர், கிசான் ஆகியோரின் அன்புப் பேரனும், லேசானின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-06-2000 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
LION: சகாயறாஜ் பெர்னாண்டோ M.J.F
(மகன்)

(1363)

இப்பத்திரிகை "வலம்புரி" அச் சேக ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.